

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | டிசம்பர் 30, 2021 | புரட்சி 20 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00


## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தலையங்கத் தொகுப்புகள்

# ஐந்து தொகுதிகளாக வெளியிடப்பட்டது

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டின் ஆசிரியர் விடுதலை இராசேந்திரன் எழுதிய தலையங்களின் நான்கு தொகுப்புகளும் கோடங்குடி மாரிமுத்து என்ற புனைப் பெயரில் அவர் எழுதிய நய்யாண்டி எழுத்துகள் ஒரு தொகுதியாகவும் 5 தொகுதிகளாக வெளி வந்துள்ளது.

பெரியார் நினைவு நாளான டிசம்பர் 24ஆம் தேதி மாலை 5 மணியளவில் சென்னை நிருபர்கள் சங்க அரங்கில் நடந்த நிகழ்வுக்கு தென்சென்னை மாவட்டக் கழக செயலாளர் இரா. உமாபதி வரவேற்புரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.


தமிழ்நாடு மாநில கொள்கை வளர்ச்சிக் குழுத் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் நூல்களை வெளியிட தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி பெற்றுக் கொண்டார். தொகுப்புகள் பற்றி மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சித் தோழர் வாலாஜா வல்லவன் அறிமுக உரையாற்றினார். விடுதலை இராசேந்திரன் ஏற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் மேடைக்கு வந்து தொகுப்புகளை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வாங்கினர். இரண்டே நாட்களில் மிகச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த மாணவர் நகலக உரிமையாளர் அ. சவுரி ராசனுக்கும் அவரது இணையர் மணிமேகலைக்கும் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆடை போர்த்தி சிறப்பு செய்தார்.

நூலை வெளியிட்டு உரையாற்றிய முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், “பெரியார் காலத்தில் இல்லாத பிரச்சினைகள் இப்போது புதிதாக வந்திருக்கிறது என்றாலும் அடிப்படையான தத்துவத்தில் நாம் முழுமையான முன்னேற்றம் அடையவில்லை. எதிரிகள் மிகவும் நுட்பமாக செயல்படுகிறார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதன் ஆபத்துகளை இளைஞர்கள் உணரத் தொடங்கி யிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அவாகளிடம் பெரியாரின் கருத்துகளைக் கொண்டு போய் நாம் சேர்க்க வேண்டும்” என்றார்.

‘குடிஅரசு’ பத்திரிகையைத் தொடங்கிய பெரியார், வர்தககத்துக்காக இலாப நோக்கத்தோடு வாசகர்கள் விரும்புகிறவற்றை வெளியிடும் பத்திரிகை அல்ல; மாறாக எதிரிகள் கொள்கைக் குழப்பத்தை எதிர்த்து மக்களுக்கு சுயமரியாதையை உண்டாக்கு வதற்காகத் தொடங்கப்பட்ட பத்திரிகை என்றார். இந்தப் ‘புரட்சிப் பெரியார் முழக்க’ ஏட்டின் தலையங்கங்கள், பெரியார் கொள்கை வெளிச்சத்தில் அவ்வப்போது நடந்த நிகழ்வுகளின் மீது கருத்துகளை முன் வைத்து வந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. பார்ப்பனியம் என்ற கருத்து, ஒரு குறிப்பிட்ட சமூகத்திடம் மட்டும் இல்லை, அது பார்ப்பனரல்லாதாரிடமும் பரவி நிற்கிறது. பெரியார் காலத்தைவிட இப்போது கோயில்கள் அதிகரித்து வருகின்றன. சீரடி சாய்பாபாவுக்கு மூலைக்கு மூலை கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

நாம் தமிழ்நாட்டில் அரசியல் அதிகாரத்துக்கு வந்திருக்கிறோம். ஆனாலும் அதுவே முழுமையான வெற்றி என்று கூறுவது உண்மையல்ல என்பதே எனது கருத்து. எனக்கு இப்போது உயர்மட்டத்திலுள்ள அதிகாரிகளுடன் பேசக் கூடிய வாய்ப்புகள் கிடைத்துள்ள நிலையில் அவர்கள் முழுமையான அதிகாரத்துடன் செயல்பட இயலாதவர்களாகவே இருக்கிறார்கள். டில்லியே முடிவுகளைத் திணிக்கிறது.

வி.பி.சிங், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு கொண்டு வந்ததன் விளைவாக பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பல பதவிகளுக்கு வரக்கூடிய வாய்ப்புகள் கிடைத்திருக்கிறது என்பது உண்மை தான். ஆனால், ஒரு கட்டத்துக்கு மேல் அதிகாரப் பதவிகளை எட்ட முடியாத அளவுக்கு அவர்கள் தடைபடுத்தப் படுகின்றனர். நீதித்துறை சட்டத்தை உருவாக்குவது; அதை அமுல்படுத்துவதற்கான செயல் திட்டங்களை



உருவாக்குவது என்ற நிலைக்கு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் அதிகாரிகள் உயரவில்லை. துறை சார்ந்த நிபுணர்கள் என்ற போர்வையில் அத்தகைய உயர் அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டு விடுகிறார்கள்.

உயர்ஜாதி ஏழைகள் என்று அரசியல் சட்டத்துக்கு எதிரான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதை தீவிரமாக அவர்களால் அமுலாக்க முடிகிறது. ஆனால் ஏற்கனவே அமுலில் உள்ள இட ஒதுக்கீடு சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவது இல்லை. நீதிமன்றங்களும் இதற்கு ஆதரவாகவே செயல்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உயர் அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டு அதன் வழியாக உரிமைகளைப் பறித்துக் கொண்டிருந்த அதிகாரவர்க்கத்தைப் பற்றி நுட்பமாகப் புரிந்தவர்கள் எனக்குத் தெரிந்தவரை மூன்று தலைவர்கள் தான். ஒன்று பெரியார்; இரண்டு காமராசர்; மூன்று கலைஞர்.

‘பிராமணர்களுக்கு’ ஆபத்து ஏற்படும் போதெல்லாம் தங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்த அனைவரும் வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு ‘கம்பி இல்லாத் தந்தி’போல ஒருவருக்கொருவர் தாமாகவே புரிந்து கொண்டு ஒன்று சேர்ந்து குரல் எழுப்புவதை பெரியார் ‘குடிஅரசு’ பத்திரிகையில் சுட்டிக்காட்டினார். அந்த நிலை இப்போதும் தொடரவே செய்கிறது. இந்த நிலையில் பெரியார் கொள்கை என்ற நுண் கண்ணாடி வழியாக அவ்வப்போது நடந்த நிகழ்வுகளை இந்தத் தலையங்கம் வழியாக இளைஞர்களுக்கு பயன்படும் வகையில் எனது நீண்டகால நண்பர் விடுதலை இராசேந்திரன் எழுதி வருகிறார்” என்று குறிப்பிட்டார்.

கொளத்தூர் மணி தனது தலைமை உரையில், “பல்வேறு காலகட்டங்களில் கழகம் எடுத்த தனித்துவமான நிலைப்பாடுகளை இதைப் படிக்கும்போது உணர முடிகிறது. பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினையில் ‘உள் ஒதுக்கீட்டை’ நிபந்தனையாக்கி முட்டுக்கட்டைப் போட வேண்டாம். ஒரே சிவில் சட்டம் வரவேண்டும். அதற்கு முன் இந்துக்களின் ‘ஜாதி’ பாகுபாடுகளை வலியுறுத்தும் சட்டப் பிரிவுகளை நீக்கிவிட்டு இந்து சமூகத்தின் ஜாதியற்ற சமூகத்தை ஓர்மைப்படுத்த வேண்டும். நாட்டார் வழிபாடு, சமஸ்கிருத வழிபாடு மறுப்பு என்ற கண்ணோட்டத்தில் ஆதரிக்க முடியாது. இந்த வழிபாடுகளை கிராமங்களில் ஜாதியத்தைப் பேணிக் காப்பாற்றி வருகின்றன என்று தனித்துவமான நிலைப்பாடுகளை கழகம் எடுத்ததை தலையங்கங்கள் உணர்த்துகின்றன என்றார். (உரை முழு விவரம் அடுத்த இதழில்)

## இஸ்லாமிய இனப்படுகொலைக்கு தூண்டிவிடுகிறது ‘பஜ்ரங்தள்’

ஹரித்துவாரில் இந்து வெறியர்கள் ஒன்று திரண்டு முஸ்லீம்களை இனப்படுகொலை செய் வேண்டும் என்று பேசிய வீடியோ பதிவுகள் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ன. ‘பஜ்ரங்தள்’ என்ற இந்து பயங்கரவாதிகள் வடக்கு உத்தரகாண்ட் பகுதியில் கடந்த வாரம் ஒன்று கூடி ஆயுதங்களைப் பயன்படுத்தி இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்ய உறுதி எடுங்கள் என்று பேசியுள்ளனர். இதற்காக சிறை செல்லவும் பயப்பட வேண்டாம் என்று ஒரு தலைவர் பேசியுள்ளார். நம்மில் 100 பேர் துப்பாக்கி ஏந்தினால் 2 மில்லியன் இஸ்லாமியர்களை அழித்து விடலாம் என்றும் அப்போதுதான் சனாதன தர்மத்தைக் காப்பதில் நாம் வெற்றி பெறுவோம் என்றும் ஒரு பெண் பயங்கரவாதி பேசினார். பா.ஜ.க.வைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அதில் பங்கேற்றார். காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சேவுக்கு வணக்கம் செலுத்துங்கள் என்றும் இந்துப் பெண் பயங்கரவாதி கூச்சலிட்டுள்ளார்.

பிரபோதனார்ந்தா கிரி என்பவர், “கொலை செய்யத் தயாராகுங்கள்; வீரச் சாவுக்குத் தயாராகுங்கள்” என்று பேசியிருக்கிறார். பா.ஜ.க. தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களோடு இவர் இணைந்து பல புகைப்படங்களில் காட்சி தருபவர்.

மற்றொருவர், “மோடிக்கு முன் பிரதமராக இருந்த சீக்கியரான மன்மோகன்சிங்கை தீர்த்துக் கட்ட நான் விரும்பினேன்” என்று பேசியுள்ளார். உ.பி. மாநில காவல்துறை தலைவர் அசோக் குமார் நடந்த சம்பவத்தை உறுதி செய்ததோடு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஏற்கனவே முஸ்லீமாக இருந்து பிறகு ‘இந்து’வாக மாறிய ஒருவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உ.பி. ஷியாவக்ப் வாரியத் தலைவராக இருந்த வாசிம் ரவி என்ற இஸ்லாமியர், பிறகு இந்து மதத்துக்கு மாறினார். வெறிப் பேச்சு பேசியவர்களில் அவரும் ஒருவர். இந்து மகாசபையைச் சார்ந்த அன்னபூர்ணா என்பவர் மீது வழக்கு பதிவாகியுள்ளது. ஆனால், பயங்கரவாத தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை. யாதி நரசிங்கநாத் என்ற இந்து பயங்கரவாதி இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்.

தலையங்கம்

## தமிழக அரசு, இஸ்லாமிய சிறைவாசிகளிடம் பாகுபாடு காட்டக் கூடாது

அண்ணா பிறந்தநாளையொட்டி முன் விடுதலை செய்யப்பட உள்ள சிறைவாசிகளின் பட்டியலில் இஸ்லாமியர்கள் புறக்கணிக்கப்படுவதாக முஸ்லிம் அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டில் உள்ள நியாயங்களை மறுத்துவிட முடியாது.

அண்ணாவின் 113ஆவது பிறந்தநாளை ஒட்டி தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து வரும் கைதிகளில் 700 பேரை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க உள்ளதாக கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

இதையடுத்து, ‘முன் விடுதலை’ என்ற சலுகையைப் பெறுவதற்குத் தகுதியுள்ள சிறைவாசிகள் குறித்த அரசாணையும் வெளியிடப்பட்டது.

அந்த ஆணையில், பயங்கரவாதம், மதமோதல், வகுப்பு மோதல், பாலியல் வன்கொடுமை, சாதி மோதல், அரசுக்கு எதிராக செயல்பட்டவர்கள், சிறைவாசத்தில் இருந்து தப்பிக்க முயன்றவர்கள், ஊழல் வழக்கு, குண்டுவெடிப்பு என 17 குற்றங்களை வகைப்படுத்தி, இந்தக் குற்றங்கள் தொடர்பாக தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்வதற்கு வாய்ப்பில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் தலைவர்களின் பிறந்தநாளில் முன்விடுதலை தொடர்பான பேச்சுக்கள் எழும்போதெல்லாம் கோவை சிறையில் உள்ள இஸ்லாமிய கைதிகள், ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறைப்பட்டுள்ள ஏழு பேர், வீரப்பன் அண்ணன் மாதையன் ஆகியோரது விடுதலை குறித்தும் மனித உரிமை ஆர்வலர்களால் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது.

இந்தமுறையும் இவர்கள் முன் விடுதலை செய்வதற்கான வாய்ப்புகள் தென்படாததால், இஸ்லாமிய அமைப்புகளும் மனித உரிமை ஆர்வலர்களும் அரசுக்குக் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

20 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு அவர்களை விடுதலை செய்யும் போது செய்த குற்றங்களைப் பட்டியலிடக் கூடாது. அதற்கான தண்டனையை அனுபவித்து விட்டார்கள். சிறைவாசிக்கான மனித உரிமை என்ற ஒன்றை அளவுகோல் கொண்டே இதை அணுக வேண்டும்.

அரசாணை குறித்து முதல்வரை நேரடியாக சந்தித்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளனர்.

இதுதொடர்பாக, த.மு.மு.க பொதுச் செயலாளர் முனைவர் ஹாஜாகனியிடம் பிபிசி தமிழுக்காக, “நாங்கள் சிறப்பு சலுகைகள் எதையும் கேட்கவில்லை. இஸ்லாமிய சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு பாகுபாடு இல்லாத நிலை வர வேண்டும் என நினைக்கிறோம். அதைத்தான் முதல்வரிடம் தெரிவித்துள்ளோம்” என்கிறார். இந்த கோரிக்கையில் உள்ள நியாயத்தை எப்படி மறுக்க முடியும்?

கடந்த, அ.தி.மு.க அரசு பா.ஜ.க.வின் ஆணைகளை ஏற்று செயல்பட்டதால் மத அடிப்படையில் பாகுபாடு காட்டினார்கள். தற்போது பொறுப்பேற்றுள்ள தி.மு.க அரசு, 90 சதவீத சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. எனவே, முன்விடுதலையின்போது கோவை சிறையில் உள்ள 38 இஸ்லாமிய சிறைவாசிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று மிகவும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அரசாணை மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

“தருமபுரியில் வேளாண் கல்லூரி மாணவிகள் கொல்லப்பட்ட வழக்கில் கைதானவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளனர். அதேபோல், மதுரையில் சி.பி.எம் கட்சியைச் சேர்ந்த லீலாவதி படுகொலை வழக்கிலும் தண்டனை பெற்றவர்கள் முன்விடுதலை பெற்றுள்ளனர். தஞ்சை கீழவெண்மணி வழக்கில் சேர்க்கப்பட்ட பத்து பேரும், பத்து ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டனர்.

கோவையில் உள்ள 38 முஸ்லிம் சிறைவாசிகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனையை அனுபவித்து விட்டனர்.

இவர்களில் பலர் 60 வயதைக் கடந்தவர்களாகவும் நோயாளிகளாகவும் உள்ளனர். சிறையில் இருந்து வந்தாலும் நல்ல உடல்நலனோடு அவர்கள் வாழ முடியாது. அவர்களது எஞ்சிய வாழ்நாளையாவது குடும்பத்துடன் செலவிட விரும்புகிறார்கள். இவர்கள் விஷயத்தில் மனிதாபிமானத்துடன் அரசு செயல்பட வேண்டும் என்பதே நமது உறுதியான கருத்து.

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறையில் உள்ள ஏழு பேரையும் 30 ஆண்டுகளாக சிறையில் கழித்த நிலையில் மாநில அரசுக்குரிய தண்டனைக் குறைப்பு அதிகாரத்தின் கீழ் விடுதலை செய்ய அரசு முன் வந்ததில் உள்ள நியாயம், இஸ்லாமிய சிறைவாசிகளுக்கும் அப்படியே பொருந்தும்.

இந்தியச் சிறைகளில் அடைக்கப்பட் டுள்ள சிறைவாசிகளில் சுமார் 45 சதவிகிதம் பேர் தலித்துகள், பழங்குடியினர் மற்றும்முஸ்லிம்கள் என்ற புள்ளி விவரம், தேசியகுற்ற ஆவணக் காப்பக அறிக்கை மூலம்தெரியவந்துள்ளது.

அதுமட்டுமல்ல, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் முஸ்லிம் சிறைவாசிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொதுப்பிரிவினர், உயர் சாதியினரின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது என்றும் தேசியகுற்ற ஆவணக் காப்பகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.2019-ஆம் ஆண்டு தகவலின்படி, நாட்டிலுள்ள தண்டனை சிறைவாசிகளில் தலித்துக்களின் எண்ணிக்கை மட்டும் 21.7 சதவிகிதமாக உள்ளது. விசாரணை சிறைவாசிகளின் எண்ணிக்கையிலும் 21 சதவிகிதம் பேர் தலித்துக்களாக உள்ளனர்.

பார்ப்பனர், உயர்ஜாதியினர் - சிறைவாசிகளாகத் தண்டிக்கப்படுவது மிகவும் குறைவு. நாட்டின் பொருளாதாரக் குற்றங்கள், நிதி மோசடிகளின் இந்த ‘மேல்மட்டஉயர்குலப் பெருமை’ பேசும் கூட்டத்தார் தான் பெருமளவில் ஈடுபடுகின்றனர். அவர்களின் அதிகாரச் செல்வாக்கினாலும் சட்டங்களின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பி வருகிறார்கள்.

இஸ்லாமியர்கள் என்றாலே பயங்கரவாதிகள் என்ற முடிவுக்கு அதிகாரவர்க்கம் வந்து விடுகிறது. ஏனைய சிறைவாசிகளுக்கு உள்ள விடுதலை உரிமையை இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு மட்டும் மறுப்பது மதத்தின் பார்வையே தவிர மனித உரிமைப் பார்வையல்ல.

தமிழக முதல்வர் கடந்தகால ஆட்சியின் பல தவறான முடிவுகளைக் கைவிட்டு, புதிய மக்களாட்சி நிர்வாகத்தை கட்டமைத்து வரும் நிலையில் இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு விடுதலையை பெறும் உரிமையை தயங்காது வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

## காணவில்லை; கண்டா விட்டுடாதீங்க!

**தேடப்படும் நபரின் பெயர் :** ராஜேந்திர பாலாஜி

**அடையாளம் :** நெற்றி முழுதும் விபூதி-குங்குமம்; கைகளில் கலர் கலராகக் கயிறுகள்; கழுத்தில் பக்தியை பறைசாற்றும் சாமிக் கயிறு

**உடை :** காவி சட்டை

**தொழில் :** முன்னாள் அமைச்சர்

**சமூக சேவை :** வேலை வாங்கித் தருவதாக பல கோடி வசூல் செய்தல்

**கொள்கை :** கோட்சே காந்தியை சுட்டார் என்றெல்லாம் பேசக் கூடாது. கோட்சே தியாகி; கோட்சேவை அவமதிப்பது இந்து மதத்தை அவமதிப்பதாகும் என்று பேசுவார்.

‘மோடி - எங்கள் டாடி’ என்று அவ்வப்போது சொந்தம் கொண் டாடுவார்.

பெரியார் - அண்ணா கொள்கைகள் எனக்குப் பிடிக்காது; நான் ‘இந்து’. ‘இந்து’ கடவுள்களை குறை கூறுகிறவனை விட மாட்டேன் என்பார்.

**உருமாற்றம் :** கடைசியாக தனது வெள்ளைச் சட்டையைக் கழற்றிவிட்டு காவிச் சட்டை அணிந்தார். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் வெள்ளை சட்டைக்கு மாறினார்.

பா.ஜ.க.வின் ‘தீயாக சீலர்’ எச். ராஜாவின் தீவிர விசுவாசி; தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் டெல்லிக்குப் போய் முகாமடித்து பா.ஜ.க.வில் சேர கடும் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், ‘யாத்திரை’ வெற்றி பெறவில்லை.

**லுக் அவுட் :** 5 தனிப்படை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். கடைசியாக அவருடன் பேசியவர்களை காவல்துறை நெருங்கி விட்டது.

எங்கே பாலாஜி என்று கேட்டால், ‘தெரியாதுன்னு சொல்லிடு; அடிச்சுக்கூட கேட்பாங்க; அப்பவும் தெரியாதுன்னு சொல்லிடு’ என்று வடிவேலு பாணியில் சீடர்களுக்கு உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

**கோரிக்கை :** ‘ஒரு நல்ல ‘இந்து’ உண்மையான கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள் (உம். : எச். ராஜா, அண்ணாமலை போல) இந்து சனாதன தர்மத்தைக் காப்பாற்ற முன் வரவேண்டும். அந்த அடிப்படையில் ‘ஜி’யிடம் கீழ்க்கண்ட கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்று தாழ்மையுடன் விண்ணப்பிக்கிறோம்.

“ஸ்ரீ ராஜேந்திர பாலாஜி, ஜீ! நீங்கள் பழுத்த ஆன்மீகத் தோற்றத்துடன் பவனி வந்தீர்கள்; ‘இந்து’ எதிர்ப்பாளர்களுக்கு பதிலடி தந்தீர்கள்; எனக்கு பெரியார்-அண்ணா கொள்கைகள் எல்லாம் தெரியாது என்று கூறி ‘இந்து சனாதனத்துக்கு’ கிளுகிளுப்பு ஊட்டினீர்கள். நாங்கள் பூரித்தோம்; கொண்டாடினோம்.

அப்படிப்பட்ட ‘உத்தமரான’, ‘இந்து சனாதன தர்ம’ விசுவாசியான நீங்கள், தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பது, எங்கள் மனதைப் புண்படுத்துகிறது. இலட்சோபலட்சம் ‘இந்து’க்கள் புண்பட்டுக் கிடக்கிறார்கள். இதுதான் கடவுள், மத, பக்தி யோக்கியதையா என்று கேள்வி கேட்கிறார்கள்.

நீங்கள் ஒரு அமைச்சர். அரசியல் சட்டத்தை மதிப்பதாக உறுதியேற்று பதவிக்கு வந்தவர். இப்போது தேடப்படும் ‘கிரிமினலாக’ ஓடி ஓடிப் பதுங்குவது நியாயமா? நேர்மையா? இதுதான் நமது இந்து சனாதனமா?

நிச்சயமாக உங்கள் விபூதி - குங்குமம் - தாயத்துக் கயிறு - நீங்கள் வணங்கும் இறைவன் - எதுவும் உங்களைக் காப்பாற்ற முன்வரப் போவதே இல்லை. உச்சநீதிமன்றமும் உங்கள் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து விட்டால், அப்புறம் உங்கள் கதை அம்போ தான்!

கடவுளிடம் சரணாகதி அடைவதே நமது இந்து தர்ம சனாதம் என்பது உண்மைதான். அதை பிறகு நாம் எல்லோரும் சேர்ந்து பேசி இந்த பெரியாரின் நாத்திகக் கூட்டத்துக்கு பதிலடி கொடுப்போம். அதற்கு முன் காவல்துறையிடம் சரணடைந்து விடுங்கள்.”

இந்து - சனாதனத்தின் மான மரியாதையைக் காப்பாற்றுங்கள் - எங்கள் மானம் கப்பல் ஏறுகிறது.

- இப்படி ஒரு கோரிக்கையை ‘ஜி’யிடம் வைக்க வேண்டும் என்பதே வேண்டுகோள்!

‘கண்டா வரச் சொல்லுங்க’ என்ற கர்ணன் படப் பாடலை சற்று மாற்றிப் பாட வேண்டும் போலிருக்கு! “கண்டா விட்டுடாதீங்க; கண்டிப்பா கட்டிப் போடுங்க.”

**– கோடிங்குடி மாரிமுத்து**

## கழகம் முன்னெடுத்த பெரியார் நினைவு நாள் நிகழ்வுகள்

**சென்னை :** பெரியாரின் 48ஆவது நினைவு நாள் நிகழ்வு 24.12.2021 அன்று காலை 8:30 மணியளவில் சென்னை இராயப்பேட்டை வி.எம். தெரு பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. முதலாவதாக தோழர்கள் கிருத்திகா, லீலா ஆகியோர் பெரியாரின் சிலைக்கு, தோழர்களின் கொள்கை முழக்கங்களுடன் மாலை அணிவித்தனர். அருகில் அமைத்திருந்த பெரியார் நினைவு மேடையில், களப்பணியில் உயர்நீத்த, கண்ணா - குமார் உருவப் படத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். பின் பெரியார் நினைவு நாள் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, சிம்சன், தியாகராயர் நகர், எம்.ஜி.ஆர். நகர், கிண்டி, மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்வில், தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர்கள் அய்யனார், அன்பு தனசேகர் ஆகியோர் உட்பட சென்னை கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். காலை உணவை, தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் வழங்கினார். சென்னை மாவட்ட கழகம் சார்பில் நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

**பொள்ளாச்சி :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பில், பொள்ளாச்சி பேருந்து நிலையத்தின் முன்பு தந்தை பெரியாரின் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஜாதி ஒழிப்பு, சமூக நீதி, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு கொள்கைகள் தோழர்களால் முழக்கமிடப் பட்டது.

(4ஆம் பக்கம்)

# நீட் : கிடப்பில் போடும் ஆளுநர்; பா.ஜ.க.–அ.தி.மு.க. இரட்டை வேடம்

தமிழக சட்டமன்றத்தில் நீட் தேர்வை இரத்து செய்யக் கோரும் மசோதாவை நிறைவேற்றி தமிழக ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி மூன்று மாதங்கள் ஓடிய பிறகும் ஆளுநர் மாளிகை அப்படியே கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது. முதல்வர் நேரில் சென்றும் அழுத்தம் தந்தும், காதில் போட்டுக் கொள்ளவில்லை. மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர் வில்சன், நீட் இரத்து கேட்டு தனி நபர் மசோதாவை அறிமுகப்படுத்தி எதிர்ப்பைப் பதிவு செய்தார். உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு நேரிலும் வற்புறுத்தியுள்ளார். நீட் தேர்வு தாக்கம் குறித்து ஆராய தமிழக அரசு நியமித்த ஏ.கே. ராஜன் குழு நியமன ஆணையை இரத்து செய்யக் கோரி தமிழக பா.ஜ.க. சென்னை உயர்நீதிமன்றத் தில் வழக்கு தொடர்ந்தது. நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து விட்டது. அடுத்தகட்டமாக தமிழக அனைத்துக் கட்சி சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் குடியரசுத் தலைவரை நேரில் சந்தித்து வலியுறுத்தத் திட்டமிட்டுள்ளதாக டி.ஆர். பாலு இப்போது அறிவித்திருக்கிறார். இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவில் பா.ஜ.க.வும் அ.இ.அ.தி.மு.க.வும் கையெழுத்திட்ட மறுத்து விட்டது என்ற தகவலையும் டி.ஆர். பாலு தெரிவித்திருக்கிறார். சட்டமன்றத்தில் நீட் எதிர்ப்பு மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த இந்த இரண்டு கட்சிகளும் இப்போது திடீர் என்று பல்டி அடித் துள்ளன. குடியரசுத் தலைவரை சந்திப்பதற்கு அழைப்பு விடுத்தும் உடன்வர மறுத்துள்ளனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை இரத்து செய்வோம் என்று கூறினீர்களே; ஏன் இரத்து செய்ய வில்லை என்று எடப்பாடி பழனிச்சாமி மேடைகளில் நீட்டி முழங்கி வருகிறார். நீட் மசோதாவுக்கு ஒப்புதல் தர முடியாது என்று குடியரசுத் தலைவர், தமிழக அரசுக்கு தெரிவித்த கருத்தை மக்களுக்கு தெரிவிக்காமலேயே ஓராண்டுக்கு மேல் மூடி மறைத்தவர் அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி என்பதையும் மக்களிடம் நாம் நினைவூட்ட வேண்டியிருக்கிறது.

### ஆயுதப் படையினர் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் நீக்கப்பட வேண்டும்

ஆயுதப் படையினர் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் கிழித்தெறியப்பட வேண்டும் என்று மக்கள் ஏன் கருது கிறார்கள்? இந்தச் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின்கீழ் செல்லுபடியாகக் கூடியதா என 1997இல் உச்சநீதி மன்றத்தில் அரசமைப்புச்சட்ட அமர்வாயம் பரிசீலித்து, இந்தச் சட்டமானது அரசமைப்புச் சட்டத்தின்கீழ் செல்லுபடியாகக் கூடியது என்றும், தன்னிச்சையாக செயல்படும் தன்மையிலிருந்தும் பாதிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தது. (Naga People's Movement of Human Rights v. Union of India, 1997). கோட்பாட்டின்படி இது சரியானதாக இருக்கலாம். ஆனால், அந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் விதத்தைப் பார்த்தால் அப்படிச் சொல்லமுடியாது என சந்தேகமறக் கூற முடியும்.

ஆயுதப் படையினருக்கு வங்கம், அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப், தில்லி, நாடு பிரிவினையடைந்த போது அங்கேயிருந்த ஐக்கிய மாகாணங்கள் ஆகியவற்றில் எழும் நிலைமைகளைக் கையாள் வதற்காக அவசரச் சட்டங்கள் மூலமாக சிறப்பு அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. இந்த அவசரச் சட்டங்கள் பின்னர் 1948ஆம் ஆண்டு ஆயுதப் படையினர் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தால் மாற்றி யமைக்கப்பட்டன. இந்தச் சட்டம் ஆரம்பத்தில் ஓராண்டுக்கு மட்டும் கொண்டு வரப் பட்டது. பின்னர் அது ஒவ்வோராண்டும் நீட்டிக்கப்பட்டு, அதுபோன்று 1958 வரையிலும் தொடர்ந்தது. பின்னர் 1958இல் கொண்டு வரப்பட்ட சட்டம் ஆரம்பத்தில் அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களுக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் வட கிழக்கு பிராந்தியம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தில் மொத்தம் ஆறு பிரிவுகள் மட்டுமே உள்ளன. இவற்றில் 3, 4 மற்றும் 6 ஆகிய பிரிவுகள் மிகவும் பிரச்சனைக்குரியவைகளாகும். 3ஆவது பிரிவு, ஒரு பகுதியை "அமைதி குலைந்த பகுதி" ("disturbed area") என்று பிரகடனம் செய்வதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சம்பந்தப்பட்டது. ஒரு பகுதி "அமைதி குலைந்த பகுதி" அல்லது ஆபத்தான பகுதி என்று சம்பந்தப்பட்ட அதிகாரவர்க்கம் திருப்தி அடைந்தால் போதுமானது, இந்தச் சட்டம் அங்கே அமல்படுத்தப் படும். அதாவது, அங்கேயுள்ள அதிகாரிகளின் தன்னிலை திருப்தியை (subjective satisfaction) அடிப்படையாகக் கொண்டு அல்லது அங்கேயுள்ள புறநிலை எதார்த்த நிலைமையினை (objective material) அடிப்படையாகக் கொண்டு அங்கேயுள்ள அதிகாரி தன் விருப்பத்தை வைத்து இதனைப் பிரகடனம் செய்கிறார். இது மிகவும் முக்கியம். ஏனெனில், கடந்த காலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி பல மாநிலங்களில் வகைதொகையின்றி திணிக்கப்பட்டது.

இவ்வாறு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவதற்கு அங்கேயுள்ள புறநிலை எதார்த்த நிலைமை தேவை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய வரை குடியரசுத் தலைவர் ஆட்சி அந்த மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டு வந்தது. துரதிர்ஷ்டவசமாக உச்சநீதிமன்றம் இப்போது தன்னிலை திருப்தியா? இல்லை புறநிலை எதார்த்த நிலைமையா (subjective satisfaction versus objective material) என்பதை ஆராய்ந்திட வில்லை. ஆகையால், ஆட்சியிலுள்ளவர்களின் விருப்பு வெறுப்புக்கிணங்க ஒரு பிரகடனத்தை ஏற்படுத்திட முடியும். இவ்வாறு ஆட்சியாளர்களின் பிரகடனம் எதையும் நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்தி ரத்து செய்ததாக எடுத்துக் காட்டு எதுவும் இல்லை.

பிரகடனத்தின் கால அளவு குறித்தோ அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் அது நிர்வாகத்தால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்தோ சட்டத்தில் எதுவும் கூறப்படாமல் அது மவுனம் கடைப் பிடிக்கிறது. உச்சநீதிமன்றத்தின் முன் அட்டார்னி-ஜெனரல் பிரகடனங்களை ஒன்றிய அரசு இனிமேல் ஆய்வு செய்திடும் என்றும் அதனை ஒவ்வோராண்டும் செய்திடும் என்றும் கூறினார். ஆனால் உச்சநீதிமன்றம் இவ்வாறு ஆய்வு செய்யப் படுவதை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செய்திட வேண்டும் என்று கூறி அவ்வாறு கட்டளையும் பிறப்பித்திருந்தது. இவ்வாறு மறு ஆய்வு செய்வது எந்திரரீதியாக இருக்கக்கூடாது என்றும், வழக்கமான ஒன்றாக அது மாறிவிடக் கூடாது என்றும் எதிர் பார்க்கப்பட்டது. ஆனாலும் இதுதொடர்பாக எதார்த்தத்தில் நடந்திருப்பது என்ன என்று எவருக்கும் தெரியாது. ஏனெனில் 1997க்குப் பின்னர் இதுநாள் வரையிலும் இத்தகைய பிரகடனங்கள் எவ்விதமான நீதித்துறை ஆய்வும் மேற்கொள்ளப் படாமல் தொடர்ந்து இருந்து வருகின்றன.

வேறொரு வழக்கில், உச்சநீதிமன்றமானது, திரும்பத் திரும்ப அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்படுவது அரசமைப்புச் சட்டத்தின் மீதான மோசடி என்று கூறி யிருக்கிறது. இந்த தர்க்க முறையை இதற்கும் பொருத்திப் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியைத் திரும்பத் திரும்ப "அமைதி குலைந்த பகுதி" என்று கூறுவது ஆயுதப் படையினர் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் மீதான மோசடியேயாகும். நாகாலாந்து மாநில அரசாங்கம், எங்கள் மாநிலத்தில் "அமைதி குலைந்த பகுதி" எதுவும் இல்லை என்று கூறுகிறது. ஆனால் ஒன்றிய அரசாங்கமோ அது "அமைதி குலைந்த" மாநிலம் என்கிறது. யார் கூறுவது சரி, ஏன்?

இறுதியாக, மேற்படி சட்டத்தின் 3ஆவது பிரிவு, ஆயுதப்படையினர் சம்பவ இடத்தில் உள்ள சிவில் நிர்வாகத்திற்கு உதவியாக செயல்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது. ஆனால், நாகாலாந்தில் மோன் மாவட்டத்தில் சுரங்கத் தொழிலாளர்கள் சமீபத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தை, அங்கே ஆட்சிபுரியும் சிவில் நிர்வாகம் கொஞ்சம்கூட அறிந்திருக்கவில்லை என்றும், ஆயுதப்படையினர் மேற்கொண்ட அல்லது மேற்கொள்ள முடிவு செய்திடும் நடவடிக்கைகள் குறித்து அதற்கு எதுவுமே தெரியாது என்றும் கூறப்படுகிறது. மிகவும் மோசமான முறையில் நடந்துள்ள இந்த சம்பவத்திற்கு, யார் பொறுப்பு என்கிற பிரச்சனையையும் எழுப்பி யிருக்கிறது.

மேற்படி சட்டத்தின் 4ஆவது பிரிவு, ராணுவ அதிகாரி களுக்கு, சுடுவதற்கான அதிகாரத்தை அளிக்கிறது. ஆணை யிடப்படாத அதிகாரிகள் (non-commissioned officers) உட்பட எந்த அதிகாரியாக இருந்தாலும், "அமைதி குலைந்த" பகுதி என்று பிரகடனம் செய்யப்பட்ட பகுதியில், சட்டம்-ஒழுங்கை சீர்குலைக்கும் விதத்தில், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடியிருந் தாலோ அல்லது எவரேனும் ஆயுதங்கள் வைத்திருந் தாலோ, அவர்களை அதிகாரிகள் சுடலாம். பொது ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கு துப்பாக்கியால் சுடுவது அவசியம் என்று அவர் (தன்னிச்சையாகவோ அல்லது புறநிலைமைகளைப் பரிசீலனை செய்தோ) முடிவுக்கு வந்தால் போதும். நாகாலாந்து மாவட்டத்தில் நடந்த நிகழ்வில், சம்பவ இடம் தொடர்பாக புலனாய்வு அறிக்கைகள் வந்திருந்த தாகவும், அதனால் அந்த அறிக்கைகளின் அடிப் படையில் அந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால், பொது ஒழுங்கு நிலைமை ஏற்பட்டிருந்ததா என்பது குறித்தோ, சுரங்கத் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் படுவதற்கு முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவோ எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. இவ்வா றெல்லாம் செய்யாதது இந்தச் சட்டப்பிரிவை முழுமையாக மீறிய செயல் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

சட்டத்தின் 4ஆவது பிரிவுக்கு உட்பட்டு நடக்காத தால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன? சட்டத்தின் 6ஆவது பிரிவு, ஒன்றிய அரசின் முன் அனுமதி இல்லாமல், இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் மீது வழக்குத் தொடரவோ, அல்லது இதர சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற் கொள்ளவோ தடை விதிக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தின் 4ஆவது பிரிவிற்கு உட்பட்டு செயல் படாமல் எந்த அதிகாரியாவது நடந்து கொண்டால், ஒன்றிய அரசின் முன் அனுமதியின்றி, அவர்கள் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. கடந்த 63 ஆண்டுகளில் ஒன்றிய அரசு இவ்வாறு முன் அனுமதி எவருக்கும் வழங்கியதுமில்லை என்று சமீபத்தில் ஒரு கட்டுரையில் ஒரு விமர்சகர் குறிப்பிட்டிருந்தார். (சஞ்சய் ஹசரிகா, இந்துஸ்தான் டைம்ஸ், 7 டிசம்பர் 2021). இவ்வாறு ஒன்றிய அரசு மறுத்ததை எதிர்த்து எவரும் நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவும் செய்ததாகவும் தெரியவில்லை.

இவ்வாறாக ஆயுதப் படையினர் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கும் விதம், இந்தச் சட்டமானது முற்றிலுமாக மாற்றி எழுதப்பட வேண்டும் அல்லது கிழித்து எறியப்பட வேண்டும் என்றே பரிந்துரைக்கிறது. இதைத்தவிர மூன்றாவது மாற்று எதுவும் இல்லை.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.12.2021

## மாணவர்கள் கவனத்துக்கு : அரசு தேர்வாணையம் அறிவிப்பு

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் டிஎன்பிஎஸ்சி மூலம் 2022-ம் ஆண்டு 12,263 காலி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதில் குரூப்-2,குரூப்-2ஏ, குரூப்-4 பதவிகளில் மட்டும் 11,086 காலி இடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு தேவைப்படும் பணியாளர்கள், அலுவலர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) மூலமாக தேர்வு செய்யப்படுகின்றனர். இதற்காக டிஎன்பிஎஸ்சி அவ்வப்போது போட்டித் தேர்வுகளை நடத்தி, தகுதியான நபர்களை தேர்வு செய்துஅரசு துறைகளுக்கு வழங்குகிறது.

ஓராண்டில் எந்தெந்த அரசு பணிகளுக்கான தேர்வு அறிவிக்கை எப்போது வெளியிடப்படும், எப்போது தேர்வு நடக்கும், தேர்வு முடிவுகள், நேர்காணல் எப்போது நடைபெறும் என்ற விவரங்கள் அடங்கிய வருடாந்திர தேர்வுக் கால அட்டவணையை (Annual Planner) டிஎன்பிஎஸ்சி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அரசு பணியில் சேர விரும்பும் இளைஞர்கள் போட்டித் தேர்வுக்கு முன்கூட்டியே திட்டமிட்டு படிப்பதற்கு தேர்வுக் கால அட்டவணை பெரிதும் உதவுகிறது. தற்போதுதமிழக முதல்வரின் செயலராகபணிபுரியும் த.உதயசந்திரன், டிஎன்பிஎஸ்சி செயலராக இருந்தபோது, இந்த நடைமுறையை அறிமுகப்படுத்தினார்.

இந்நிலையில், 2022-ம் ஆண்டுக்கான வருடாந்திர தேர்வுக் கால அட்டவணையை டிஎன்பிஎஸ்சி சமீபத்தில் வெளியிட்டது. அதில் 32 போட்டித் தேர்வுகளுக்கான அறிவிப்புகள் இடம்பெற்றன. குறிப்பிட்ட சில தேர்வுகளுக்கான அறிவிப்புகளில் மட்டும் உத்தேசகாலியிடங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. தற்போது ஒவ்வொரு தேர்வு மூலமாக உத்தேசமாக எத்தனை காலி இடங்கள் நிரப்பப்படும் என்ற விவரங்களுடன் திருத்தப்பட்ட புதிய தேர்வுக் கால அட்டவணை டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2022-ம் ஆண்டு அரசின் பல்வேறு துறைகளில் 12,263 காலி இடங்கள் நிரப்பப்படுகின்றன. இதில் குரூப்-2, குரூப்-4பதவிகளில் மட்டும் 11,086 காலிஇடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. குரூப்-2, குரூப்-2ஏ தேர்வு மூலமாக 5,831 இடங்களும், குரூப்-4தேர்வு மூலமாக 5,255 இடங்களும் நிரப்பப்பட உள்ளன. குரூப்-2 தேர்வை பட்டதாரிகளும், குரூப்-4 தேர்வை 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் எழுதலாம்.

மேலும், சிவில் நீதிபதி தேர்வு மூலம் 245 காலி இடங்களும், குரூப்-1 தேர்வு மூலம் 49 காலி இடங்களும், ஒருங்கிணைந்த பொறியியல் பணி தேர்வு மூலம் 167 காலி இடங்களும் நிரப்பப்படுகின்றன. இந்துசமய அறநிலையத் துறையில் செயல் அலுவலர் பதவியில் (கிரேடு-1, 3, 4) மொத்தம் 65 காலி இடங்கள் உள்ளன. அதிக எண்ணிக்கையிலான தேர்வர்கள் பங்கேற்கும் குரூப்-2தேர்வுக்கான அறிவிப்பு பிப்ரவரியிலும், குரூப்-4 தேர்வுக்கான அறிவிக்கை மார்ச்சிலும் வெளியிடப்படும் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

அனைத்து தேர்வுகளுக்கான புதிய பாடத் திட்டம், தேர்வு திட்டம், அனைவருக்கும் பொதுவான கட்டாய தமிழ் மொழித் தாள் தேர்வு பாடத் திட்டம், தேர்வு திட்டம் ஆகியவற்றை தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) அறிந்துகொள்ளலாம். பொதுவாக, ஒரு தேர்வுக்கான அறிவிப்பு வெளியிட்டு, தேர்வு நடத்தி இறுதி முடிவுகள் வெளியிட டிஎன்பிஎஸ்சி 2 ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக்கொள்வதாக போட்டித் தேர்வுக்கு தயாராகி வருவோர் குற்றம்சாட்டுகின்றனர். மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) போல டிஎன்பிஎஸ்சியும் காலக்கெடு நிர்ணயித்து தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிட வேண்டும் என்பதே தேர்வர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ‘உண்ணாவிரதத்தை’ எதிர்த்து ‘உண்ணும் விருந்து’

# பா.ஜ.க. உண்ணாவிரத மிரட்டலுக்கு ஈரோடு (கிழக்கு) மாவட்டக் கழகம் பதிலடி

*வாரணாசியில் காசி விசுவநாதன் கோயில் வாசலில் பங்கேற்றுப் பேசிய மோடியின் பேச்சை ஈரோடு கொடுமுடி கோவிலுக்குள் திரையிட்டுக் காட்ட வற்புறுத்திய பா.ஜ.க. உள்ளிட்ட மதவாத பிரிவுகளின் கோரிக்கைக்கு இடம் கொடுக்காத அறநிலையத்துறை அதிகாரிகளை தொடர்ச்சியாக பணி செய்ய விடாமல் பா.ஜ.க.வினர் தடுத்து வந்தனர்.*

ஈரோடு மாவட்டம் கொடுமுடி மகுடேசுவரர் கோயிலில் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடியதாக செயல் அலுவலர் உள்பட சிலர் மீது பாஜகவினர் புகார் அளித்தனர்.

இந்நிலையில் செயல்அலுவலர் ரமேஷ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பாஜகவைச் சேர்ந்த சரஸ்வதி உள்பட சிலர் மீது புகார் தெரிவித்து கொடுமுடி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தார்.

இதற்கு எதிர்வினையாக பாஜக மாநில விவசாய அணி தலைவர் நாகராஜ், ஆகம விதிகளுக்கு எதிராகச் செயல்பட்ட செயல்அலுவலர் ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் 26 ஆம் தேதி உண்ணாவிரதம் போராட்டம் நடைபெறும் எனவும், அதற்குபிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடைபெறும் எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில்,கோயில் அலுவலரை பாஜகவினர் மிரட்டுவதாகக் கூறி அவருக்கு ஆதரவாக திராவிடர் விடுதலைக் கழகம் களமிறங்கியது.

இது தொடர்பாக கழகம் வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில்:

“ஈரோடு மாவட்டம் கொடுமுடி மகுடேசுவரர் கோவில் ஊழியர்கள் மீதும், அலுவலகர்களின் மீதும் தொடர்ச்சியாகப் போலியான புகார்களைத் தந்தும் பொய்யான குற்றச்சாட்டுகளை அவர்கள் மேல் சுமத்தியும் ஓர் இழிவான அரசியலைத் தொடர்ச்சியாக செய்து வருகிறது பாஜக /இந்து மக்கள் கட்சி /இந்து முன்னணி மற்றும் அதன் துணை அமைப்புகள்.

இவர்களின் இந்த இழிவான அரசியலின் தொடர் நிகழ்வாக, நாளை கொடுமுடி மகுடேசுவரர் கோவில் நிர்வாகத்தைக் கண்டித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக பாஜக கூடாரம் அறிவித்திருக்கிறது.

இவர்களின் இந்த தொடர்ச்சியான பொய் பிரச்சாரங்களை முறியடிப்பதும், கோவில் பணியாளர்களும் அப்பகுதியைச் சார்ந்த மக்களும் ஒரு சுமூகமானச் சூழலுக்குள் வாழ்வதைத் தொடரச் செய்வதும் பெரியார் தொண்டர்களின்



கடமையாகும்.

எனவே, பாஜக கூடாரத்தின் உண்ணாவிரத நாடகத்தை முறியடிக்கும் விதமாக திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமையில் முற்போக்குக் கட்சிகள் அமைப்புகளின் ஆதரவைத் திரட்டி, 26.12.2021 ஞாயிறு காலை பத்து மணியளவில் கொடுமுடியில் உண்ணும்விரதப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு என்றென்றும் மத துவேசத்தை ஆதரிக்காத சகோதர மனப்பான்மை கொண்ட பெரியார் மண் என்பதை காவிகளுக்கு மீண்டும் காத்திரமாக உணர்த்திடவும் இப்போராட்டத்திற்கு அனைவரும் கரம் கோர்க்குமாறு தோழமையுடன் வேண்டுகிறோம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பாஜகவின் போராட்டத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகம் எதிர்போராட்டம் அறிவித்தவுடன் பாஜகவினர் பின்வாங்கிவிட்டனர். அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை இரத்து செய்தனர்.

ஏற்கனவே திருவரங்கம் கோயிலுக்குள் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, தனது கட்சித் தொண்டர்களுடன் மோடி நிகழ்ச்சியை திரையிடச் செய்து பார்த்தார். கோயில் ஆகமவிதிகளுக்குள் இது வருமா என்பதை பார்ப்பனர்கள் தான் விளக்க வேண்டும்.

## 300 தோழர்கள் பங்கேற்ற கிருட்டிணகிரி மாவட்டக் கலந்துரையாடல் எழுச்சி



கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் நகரத்தில் 15.12.2021 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கலந்துரையாடல் கூட்டம் மாலை 5 மணியளவில் நடைபெற்றது. கலந்துரையாடலில் 20 உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டமும் நடைபெற்றது.

நிகழ்விற்கு முன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பாளர்களும், தளி, கெலமங்கலம், சூளகிரி ஒன்றிய பொறுப்பாளர்களும் வரவேற்றனர். ராயக் கோட்டை வட்டம் காடு செட்டிபட்டி சோதனை சாவடிக்கு வந்தடைந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களை சுமார் 50க்கும் மேற்பட்ட வாகனங்களில் அணிவகுத்து நின்ற மாவட்ட பொறுப்பாளர்கள் வாஞ்சிநாதன், குமார், கிருஷ்ணன், மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள் அவரை வரவேற்று ராயக்கோட்டை, கெலமங்கலம், மத்திகிரி கூட்டு ரோடு வழியாக பேரணியாக ஒசூர் இரயில் நிலையம் வந்தடைந்தனர்.

ஒசூர் ரயில் நிலையத்தில் நகர பொறுப்பாளர்கள் ராஜ்குமார், சரவண குமார், ஜேக்கப் ஜேரிமையா, பிரவீன் ஏற்பாட்டில் சிறப்பான இசை முழக்கமிட்டு கழகத் தலைவரை வரவேற்றனர். பின்பு அருகில் உள்ள அக்கரா மஹாலில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டத்திலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கலந்துரையாடல் தொடங்கியது. பெரியாரின் கொள்கைகளையும் உறுப்பினர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்’ என்றும் உரையாற்றினார். மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர்களும் திராவிடர் விடுதலைக் கழக ஆதரவாளர்களும் மரியாதை நிமித்தமாக கழகத் தலைவரைச் சந்தித்தனர். கூட்டத்தின் இறுதியில் மாவட்ட துணைத் தலைவர் பழனி நன்றி கூறினார்.

சுமார் 300க்கும் மேற்பட்ட தோழர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் வழக்குரைஞர் பிரபாகரன், அஜித், மக்கள் விடுதலை முன்னணி தலைவர் இராசாய்யா, தம்பு, தமிழ்புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் இராவணன், கிரேட் களி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், ஆறு கேசவன் லோகநாதன், பிரகாஷ், திராவிட இயக்கத் தமிழர் பேரவை வெற்றிவேல், நவீன்குமார், பூஞ்சோலை அறக்கட்டளை தட்சிணா மூர்த்தி, தமிழ்நாடு மாணவர் கழகம் சபரி கிரி, தமிழ்நாடு மாணவர் மன்றம் பிரசாந்த் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். இதில் வினோதினி, சிவா, சுரேஷ் குமார், வசந்த் ஆகிய பல்வேறு அமைப்புகள் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை நகரம்:** தலைவர் பெரியாரின் 48ஆவது நினைவு நாளை ஒட்டி காந்திபுரம் பெரியார் சிலைக்கு கழகத் தோழர் இராஜாமணி தலைமையில் மாலை யிட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பி நிலா அறிவரசு உறுதிமொழி கூற அனைத்து தோழர்களும் உறுதி மொழி ஏற்று வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி யில் பன்னீர்செல்வம், நேருதாசு, வெங்கட், நிர்மல், மாதவன் சங்கர், கிருஷ்ணன், புரட்சி தமிழன், சதீஷ், மணிராஜ், துளசி, இயல், ஜெகதீஷ், கவிதா, ரவி, தங்கராஜ், சிவராஜ் கலந்து கொண்டனர். தோழர்களுக்கு ஜெகதீஷ் கவிதா தேநீர் வழங்கினர்.

**சவுரிபாளையம்:** சவுரிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் பெரியார் பற்றாளர் டிட்டோ போட்டோஷ் உரிமையாளர் சிவராஜ் அவர்கள் ஏற்பாட்டில் பெரியார் படத்திற்கு மாலையிட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பி திராவிடர் விடுதலைக் கழகத்தினர் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர் .

**மேட்டுப்பாளையம் :** மேட்டுப்பாளையத்தில் திராவிடர் கழகத் தோழர்களும் திராவிடர் விடுதலைக் கழக தோழரும் இணைந்து பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றனர். திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாவட்ட தலைவர் இராமச்சந்திரன் கலந்து கொண்டார்.

**திருச்செங்கோடு :** பெரியாரின் நினைவு நாளை ஒட்டி, திருச்செங்கோடு நகர கழகம் சார்பாக காலை 8 மணியளவில் நகரச் செயலாளர் பூபதி தலைமையில், திருச்செங்கோடு நகர பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பெரியாரின், ‘பெண் ஏன் அடிமையானாள்’ 500 நூல்கள் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர் களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th December 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN